'திராவிட மாடல்' அரசின் நாயகர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த

# 'TAPS' ஓய்வூதியத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்!

## சட்டப் பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

**சென்னை. பிப்.22 - சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத் தின் போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு. 'திராவிட மாடல்' அரசின் நாயகர். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்துள்ள "புதிய TAPS ஓய்வூதியத் திட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?" என்பது குறித்து விரிவான விளக்கம் அளித்தார்.**



அமைச்சர் குறிப்பிட்டதாவது:-

UPS திட்டத்தில் இருக்கக்கூடிய முக்கியமான கூறுகள், எது முக்கியமான கூறுகளோ அதை இந்த TAPS Assured Pension Scheme-ல் நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஏன் போராட்டக் களத்திற்கு வந்திருக்கக்கூடிய மிகப்பெரிய இயக்கங்கள், அதில் முன்னெடுத்திருந்த இயக்கங்கள் இதை முழுமனதோடு வரவேற்றுக் கொண்டு, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று இதை ஏன் அவர்கள் வரவேற்று முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு கூட்டம் நடத்தினார்கள் என்றால் நீங்கள் உறுதியளிக்கப்பட்டிருக்கக்கூடிய மாத ஓய்வூதியத்தினுடைய கடைசி மாதம்தான் OPSல் 50 சதவிகிதம் இருந்தது. அது இப்போது TAPSல் வந்துவிட்டது. அதேபோன்று inflationல் இருக்கக்கூடிய DA, OPSல் இருந்தது. அது இப்போது இருக்கக்கூடிய TAPSல் வந்துவிட்டது. Family pension பழைய ஓய்வூதியத் திட்டத்தில் இருந்தது. இப்போது TAPSல் family pension வந்துவிட்டது. அதேமாதிரி, குறைந்தபட்ச ஓய்வூதியம் அப்போது இருந்தது. இப்போது கொடுக்கப்பட்டது. அதற்கு பிறகு gratuity இறப்பு பணிக்கொடை gratuity இப்போது நாம் கொடுத்துவிட்டோம். Commutation benefits பழைய ஓய்வூதியத் திட்டத்திலிருந்து இப்போது கொடுத்துவிட்டோம்.

ஏறத்தாழ அதில் இருக்கக்கூடிய அனைத்து நன்மைகளையும் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக கடும் நிதிநெருக்கடிக்கு நடுவிலும் முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்த காரணத்தினால்தான் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றபோது, நீங்கள் UPS Unified Pension Schemeஐ எடுத்துவிட்டு அப்படியே போட்டுவிட்டீர்கள் என்று சொன்னார்கள். ஆனால், அது அப்படி கிடையாது. அந்தத் திட்டத்தில் பார்த்தீர்களென்றால் ஏறத்தாழ இப்போது நான் சொன்னது போன்று 50 சதவிகிதம் assured அவர்களுக்குக் கொடுக்கிறோம். அவருடைய கடந்த 12 மாத ஊதியத்தினுடைய சராசரியை எடுத்துக்கொண்டு அதில் தான் அவர்கள் சராசரி ஊதியத்தில் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்படி பார்த்தால் யாரேனும் ஒருவருக்கு முன்னால்-நாம் கடைசி மாதம் எடுக்கிறோம். டிசம்பரில் ஒருவர் பணி ஓய்வு பெறுகிறார் என்றால் அவர்களுக்கு அந்த நேரத்தில் பதவி உயர்வு கிடைத்திருக்கும். அந்தப் பதவி உயர்வு பெற்ற scaleஐ எடுத்திருக்க முடியாது. ஆனால், நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டத்தில் ஓய்வூதியத்திற்கு முன்னால் கிடைக்கக்கூடிய பதவி உயர்வு, ஆண்டு ஊதிய உயர்வு, அதேபோன்று ஊதியக் குழுக்களினால் வரக்கூடிய பலன்கள் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மொத்தத்தில் கடைசி சில மாதங்களில் அவர்களுக்கு கிடைத்திருந் தாலும்கூட ஒரு சதவிகிதம்கூட அதில் அவர்களுக்கு பாதிப்பு இல்லாமல் நாம் கொண்டு வந்திருப்பதுதான் மிக மிக முக்கியமான ஒன்று.

இன்னும்கூட சொல்ல வேண்டுமென்றால் அவர்களுடைய spouse அவர்களுக்கு மட்டும் இருந்தது. அவர்களுடைய குழந்தைகளுக்கு இல்லை. ஆனால், தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கும் இந்த ஓய்வூதியத்தை நாம் UPS-லிருந்து மாறுபட்டு இந்தத் திட்டத்தில் கொண்டு வந்திருக்கிறோம். அதேபோன்று நான் ஏற்கெனவே சொன்னதைப் போன்று commutationல் கொண்டு வந்திருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. UPSல் பார்த்தீர்களென்றால் corpus withdrawal திரள் நிதியிலிருந்து எடுக்கக்கூடியது தான் வருகிறது. அப்படி பார்த்தால் என்ன ஆகிறது என்றால் அவர்களுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய ஓய்வூதியமும், DAவும் நிரந்தரமாக குறைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. அதில் முழுத் தொகையை அவர்கள் பெற முடியாது. எனவேதான் TAPSல் இதையெல்லாம் நாம் செய்திருக்கிறோம். அதைபோல, மிக மிக முக்கியமாக குறைந்தபட்சம் தகுதி பணிக்காலம் நிறைவேறாத அரசு ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை நாம் உறுதி செய்திருக்கிறோம்.

எனவே தான் இவ்வளவு சிறப்பான கூறுகள் TAPS, Assured Pension Schemeல் இருப்பதால் இதை நீங்கள் UPS என்று எடுத்துக் கொள்ள முடியாது. UPSலிருந்து முழுமையாக ஊழியர்களின் நலனுக்காக பிரத்யேகமாக முதலமைச்சர் அவர்கள் உரு வாக்கித் தந்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

# அ.தி.மு.க., தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியதா?

## சட்டப் பேரவையில் – எடப்பாடி பழனிச்சாமிக்கு – அமைச்சர் எ.வ.வேலு அடுக்கடுக்கான வினா!

**சென்னை, பிப்.22- சட்டப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசிய போது குறுக்கிட்ட அமைச்சர் எ.வ. வேலு, "சட்டமன்றத் தேர்தலின் போது அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையை குறிப்பிட்டு இருந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றினீர்களா?" என்று வினா தொடுத்ததோடு, அ.தி.மு.க. நிறைவேற்றாத பல அறிவிப்புகளின் பட்டியலை அடுக்க டுக்காக வெளியிட்டார்.**



அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது :-

ஒரு இலட்சம் பேருக்கு போக்குவரத்துத் துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிக்கை எண் 4. 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொன்னீர்கள். செய்தீர்களா?

20,000 தொழிற்சாலைகள் இங்கு உருவாக்கப்படும், அறிக்கை எண் 4.

ஏழைகளுக்கு 3 சென்ட் வீடுகட்ட நிலம் அளிக்கப்படும் என்று இதே மாமன்றத்தில் சொன்னீர்கள். நாங்கள் அப்போது எதிர்க்கட்சியில் இருந்தோம். கொடுத்தீர்களா?

2011 ஆம் ஆண்டில் 151 நகராட்சிகளின் கழிவுகளை எடுத்து 100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வோம் என்று இதே மாமன்றத்தில் சொல்லப்பட்டது. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டது. நடந்ததா? இல்லை. ஏன்?

கச்சத் தீவை மீட்டெடுத்து தமிழர்கள் நலனைக் காப்போம், அறிக்கை எண் 19. நடந்ததா?

58 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவச bus pass வழங்கப்படும் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். நடந்ததா?

தமிழை இந்திய ஆட்சி மொழியாக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று அறிக்கை எண் 29ல் சொன்னீர்கள். நடைபெற்றதா?

கப்பல் கட்டும் துறையில் 10,000 கோடி ரூபாய் அந்நிய நாட்டு முதலீட்டை ஈர்ப்போம் என்று சொன்னீர்கள். அது நடந்ததா?

2011 ஆம் ஆண்டில் 6,000 கிராமங்களில் சீரமைக்கப்பட்ட பால் பண்ணை தொடங்கப்படும் என்று சொன்னீர்கள். அது நடந்ததா?

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் "அம்மா இரு சக்கர வாகனம்" பழுது பார்க்கிற மையம் அமைப்போம் என்று சொன்னீர்கள். அது நடந்ததா?

அனைத்து வேலைக்குச் செல்கிற பெண்களுக்கும் Amma scooter முழுமையாக வழங்கப்படும் என்று சொன்னீர்களே, அது நடந்ததா?

ஆதிதிராவிட பழங்குடியினர் நல விடுதிகளில் நீராவி கொதிகலன் அமைக்கப்படும் என்று சொன்னீர்களே, அது நடந்ததா?

நரிக் குறவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிக்கை எண் 13ல் சொன்னீர்களே, நடந்ததா?

அம்பேத்கர் கொள்கையைப் பரப்புவதற்காக 5 கோடி மதிப்பீட்டில் Dr. Ambedkar Foundation நிறுவப்படும் என்று சொன்னீர்களே, அது நடந்ததா?

இது தவிர, Ration Card வைத்திருக்கிற மகளிர் அனைவருக்கும் Cell Phone தருவதாகச் சொன்னீர்களே? அது நடந்ததா?

மேலும், நானும் பட்டியல் போட முடியும்.

நேரகாலத்தின் அருமை கருதி இத்துடன் முடித்துக் கொள்கிறேன். ஏனென்றால், நீங்கள் சொல்கிறீர்கள், நாங்களும் சொல்கிறோம். ஒரு அரசாங்கம் நிதிநிலைமைக்கேற்பதான் செய்ய முடியும். எனவே, நீங்களும் இவை அனைத்தையும் சொன்னதைச் செய்யவில்லை என்பதையும் நான் உறுதிசெய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

போக்குவரத்துத் துறையில் ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்றவர்களின் குடும்பங்களுக்கு

# பணப்பலன்கள் வழங்கிட - முதல்வர் 2446 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்!

## சட்டப்பேரவையில் – போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பெருமிதத்துடன் அறிவிப்பு!

**சென்னை, பிப். 22- போக்குவரத்துத் துறையில் ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற அல்லது பணிக்காலத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு பணப்பலன்கள் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ரூபாய் 2,446 கோடியே 46 இலட்சத்து எண்பதாயிரம் வழங்கியுள்ளார்கள் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள்.**

சட்டப்பேரவையில் அவர் குறிப்பிட்டதாவது:

திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு போக்குவரத்துத் துறை சார்பாக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்வதற்கு இந்த வாய்ப்பை வேண்டுகிறேன்.

பணிக்காலத்திலே ஓய்வு பெற்றவர்கள், விருப்ப ஓய்வு பெற்றவர்கள், இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்கு உரிய காலத்தில் பணப்பலன்கள் வழங்கப்பட முடியாத சூழல் கடந்த கொரோனா காலத்திற்கு முன்பே ஏற்பட்டது. கடந்த ஆட்சிக்காலம் முதல் இருந்து வந்தது. அந்த நிலை தொடர்ந்து நீடித்து வந்தது. அப்படி பணப்பலன்களை வழங்குவதற்கு போக்குவரத்துத் துறைக்கு இருக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக அதை வழங்க முடியாத சூழல் இருந்தபோது, அரசு சார்பாக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு கட்டமாக வழங்கி வந்தார்கள். அதிலே இன்றைக்கு உச்சகட்டமாக ஆகஸ்ட் 2024 முதல் வருகின்ற மார்ச் 2026 வரை 6,867 ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற அல்லது பணிக்காலத்தில் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கான பணப்பலன்களாக ரூபாய் 2,446 கோடியே 46 இலட்சத்து எண்பதாயிரத்தை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறை வரலாற்றிலேயே மிகப் பெரிய பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய செய்தியாக இந்த செய்தியை, இன்றைக்கு நான் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2021-2022 ஆம் ஆண்டு 1,241 பணியாளர்களுக்கு 242 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். 2022-2023 ஆம் ஆண்டு 5,267 பணியாளர்களுக்கு 1,339 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். 2023-2024 ஆம் ஆண்டு 210 தொழிலாளர்களுக்கு 32 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். 2024-2025 ஆம் ஆண்டு 4,740 தொழிலாளர்களுக்கு 1,278 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். இந்த 2025-2026 ஆம் ஆண்டிலே இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 2,446 கோடியையும் சேர்த்தால் 4,485 கோடி ஒதுக்கி, மொத்தம் 24,100 தொழிலாளர்களினுடைய குடும்பங்களுக்கு 7,379 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் துறை, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் காலத்தில் துவக்கப்பட்டு ஒரு மிகப்பெரிய துறையாக நிர்மாணிக்கப்பட்ட பிறகு, இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொரு முறை தொய்வுறும்போதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைகின்றபோதெல்லாம், அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலே, இந்த முறை ஆட்சி அமைந்திருக்கின்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு மீண்டும் ஒரு புத்துயிர் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, தொழிலாளர்களுடைய நீண்டநாள் கோரிக்கைகள் இரண்டு கட்ட பேச்சுவார்த்தையிலே நிறைவேற்றப்பட்டி ருக்கிறது. ஒரு ஆட்சிக்காலத்தில் ஒரு ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை நிகழ்த்துவதே சிரமமாக இருக்கும். ஆனால், திராவிட மாடல் முதல்வருடைய ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தில் 14-வது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை, 15-வது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை என இரண்டு பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொடுத்திருந்த Pay Matrix முறை என்ற சம்பள விகிதம் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சீர்குலைக்கப்பட்டதை மீண்டும் 14-வது ஊதிய ஒப்பந்தத்தில் முதலமைச்சர் அவர்கள் சீரமைத்துக் கொடுத்து Pay Matrix முறையிலே மீண்டும் சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். ஐந்து சதவிகித சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அடுத்த பேச்சுவார்த்தையில் ஆறு சதவிகித சம்பள உயர்வு வழங்கப்பட்டது. முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கையினால்தான் போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த ஆட்சிக்கு நம்பிக்கையாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



இந்தத் துறை இன்றைக்கு சிறப்பாகச் செயல்படுவதற்கு அவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள். அதற்கு மகுடம் சூட்டுவது போல, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள், வெளியிட்டிருக்கின்ற இந்த அரசாணையில் 2,446 கோடி ரூபாயை ஒதுக்கியதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொகை ஒதுக்குவதற்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், மரியாதைக்குரிய முதல்வர் அவர்களின் செயலாளர் மரியாதைக்குரிய R. உமாநாத், IAS., அவர்களுக்கும், ஜி.லட்சுமிபதி IAS., அவர்களுக்கும், நம்முடைய நிதித் துறையின் செயலாளர் மரியாதைக்குரிய த. உதயச்சந்திரன் IAS., அவர்களுக்கும் போக்குவரத்துத் துறையின் தொழிலாளர்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்துகொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் குறிப்பிட்டார்.

# ஒற்றைச் சாளர முறையில் - 'முனைவர்' படிப்பிற்கான மாணவர் சேர்க்கை!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் கோவி.செழியன் அறிவிப்பு!

**சென்னை,பிப்.22- 19.02.2026 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஒற்றைச்சாளர முறையில் முனைவர் பட்டப் படிப்பிற்கான (Ph.D) மாணவர் சேர்க்கை குறித்து ஆற்றிய உரை வருமாறு:-**

தற்போதுள்ள நடைமுறைகளின்படி, முனைவர் பட்டப்படிப்பிற்கான (Ph.D) மாணவர் சேர்க்கை இடஒதுக்கீடு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதிலும், சேர்க்கை வழிமுறைகளிலும் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பெரியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே, தங்களது பல்கலைக்கழக அளவில் முனைவர் பட்ட படிப்புகளுக்கான சேர்க்கைக்கு ஒற்றைச்சாளர முறையில் (Single Window System) செயல்படுத்தி வருகின்றன.

அதேபோல, உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அனைத்து அரசு பல்கலைக் கழகங்களிலும் முனைவர் பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கையானது அந்தந்த பல்கலைக்கழக அளவில் இணைய வழியிலான ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான இடத்தினை தேர்வு செய்யும் வகையில் பாடப்பிரிவு துறைகள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் அவர்களிடம் உள்ள முனைவர் படிப்பிற்கான காலியிடங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும்.



மாணவர்கள் தங்களது ஆராய்ச்சி புலம், நிறுவனம் மற்றும் மேற்பார்வையாளர்கள் குறித்த விருப்பங்களை தாங்களே தேர்வு செய்யலாம். இது மாணவர்களின் கல்விசார் நலன்களை பாதுகாப்பதுடன் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும்.

இந்த நடைமுறைகளை மாநில அளவில் கண்காணிக்க ஒருங்கிணைக்கப்பட்ட மென்பொருள் உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்படும். இதன் மூலம் மாணவர் சேர்க்கையில் இருந்து, பாடநெறி முடித்தல் (Coursework Completion), ஆராய்ச்சி மேற்பார்வையாளர்கள் ஒதுக்கீடு மற்றும் ஆய்வறிக்கை சமர்ப்பித்தல் வரை அனைத்து நிலைகளையும் கண்காணிக்க இயலும்.

மேலும், மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல் வழங்கவும், சேர்க்கை மற்றும் ஆராய்ச்சி தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்கவும் இதில் வழிவகை செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் குறிப்பிட்டார்.

கன்னியாகுமரிக்கு வருகை தரும் முதல்வருக்கு

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!

குமரி, பிப். 22- கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் அரசு நிகழ்ச்சி, முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை மற்றும் தலைவர் - மு.க. ஸ்டாலின் படைப்பகம் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.02.2026 - செவ்வாய்க்கிழமை அன்று காலை சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் தூத்துக்குடிக்கு காலை 10:00 மணிக்கு வருகின்றார்.

அதன் பின்பு கன்னியாகுமரிக்கு வருகை தரும் தலைவர் அவர்களுக்கு காலை 11:00 மணிக்கு கன்னியாகுமரி, ஜீரோ பாயிண்ட் பகுதியில் எனது தலைமையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.



மேலும், 24.02.2026 அன்று மதியம் 12:00 மணிக்கு கன்னியாகுமரி விருந்தினர் மாளிகை அருகில் உள்ள அய்யன் திருவள்ளுவர் வெள்ளி விழா நினைவு வளைவு திறப்பு விழா நிகழ்ச்சி, மாலை 5:30 மணிக்கு புத்தளம், கல்லடிவிளை பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் தலைவர் மு.க.ஸ்டாலின் படைப்பகம் திறப்பு விழா நிகழ்ச்சி, இரவு 6:30 மணிக்கு நாகர்கோவில், வேப்பமூடு சந்திப்பு, சர்.சி.பி.ராமசாமி ஐயர் நினைவு பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்ட குமரி கோமேதகம் பொன்னப்ப நாடார் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

இரவு நாகர்கோவில் அரசு விருந்தினர் மாளிகையில் தங்குகிறார். மேலும் முதலமைச்சர் அவர்கள் 25.02.2026, புதன்கிழமை அன்று காலை 9:00 மணிக்கு நாகர்கோவில், கன்கார்டியா பள்ளி மைதானத்தில் வைத்து நடைபெறும்.

நிகழ்ச்சியில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் மற்றும் புதிய பணிகளையும் தொடங்கி வைக்கின்றார்.

ஆகவே, கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு மற்றும் மேற்குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஜே. அகத்தியப்பன்

**பிப்ரவரி 22 (2005)**



**காஞ்சிபுரம் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.**

**காஞ்சிபுரம் நகரக் கழகப் பொறுப்பாளர், அவைத்தலைவர் மற்றும் நகர்மன்ற கட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு அச்சக தொழிற்சங்க பொதுச்செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**மொழிப்போர், ஈழத்தமிழர் பாதுகாப்பு, எரிசாராய கமிஷன் ஆணை நகல் எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**